# சிங்கப்பூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## தொழிலதிபர்களுடன் இன்று சந்திப்பு

**சென்னை, மே 23:** தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு தொழில் நிறுவனங்களின் அதிபர்களுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூருக்கு செவ்வாய்க்கிழமை சென்றடைந்தார்.

புதன்கிழமை முதல் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் சந்திப்பு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றம் உள்பட பல்வேறு நிகழ்வுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவுள்ளார்.

சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு 9 நாள்கள் பயணமாக சென்னையில் இருந்து காலை 11.25 மணியளவில் புறப்பட்ட முதல்வர் ஸ்டாலின், பிற்பகலில் சிங்கப்பூர் சென்றடைந்தார்.

அவரை சிங்கப்பூர் நாட்டுக்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன், தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் வரவேற்றனர்.

முதல்வருடன், அவரின் மனைவி துர்கா, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, முதல்வரின் செயலர்கள் உமாநாத், அனுஜார்ஜ், தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டி.மோகன் ஆகியோர் சென்றுள்ளனர்.



தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை, சிங்கப்பூர் விமான நிலையத்தில் செவ்வாய்க்கிழமை வரவேற்ற தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூருக்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன். உடன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன்.

**இதுவரை ரூ.2.95 லட்சம் கோடி முதலீடு:** முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அளித்த பேட்டி:

சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கக் கோரி, பல்வேறு நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்து வருகிறோம். அதனடிப்படையில், சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறேன். கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமைச்சர்கள், அரசுத் துறை உயரதிகாரிகளுடன் ஐக்கிய அரபு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

**ஜப்பான் – சிங்கப்பூர்:** தற்போது ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளில் நான் செல்லும் இடங்களிலெல்லாம் முதலீட்டாளர்களை நேரிலும், மாநாடுகள் வாயிலாகவும் சந்தித்துப் பேசவிருக்கிறேன். ஒரு சில புதிய தொழில் ஒப்பந்தங்களும் கையொப்பமாகவுள்ளன. பயணத்தின் முக்கிய நோக்கமே உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதுதான்.

கடந்த முறை துபை பயணத்தின்போது, ரூ.6,100 கோடி முதலீடுகள் மூலம் ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில்ஷெராப் குழும நிறுவனம் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. லூலூ பன்னாட்டு குழுமம் கோவையில் தன் திட்டத்தைத் தொடங்கிவிட்டது. இந்த நிறுவனம் சென்னையில் தன் திட்டத்துக்காக நிலம் தேர்வு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணியைத் தொடங்கத் தயாராக உள்ளது.

இப்போது சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளில் கிட்டத்தட்ட நூற்றுக் கணக்கான தொழில் நிறுவனங்களைச் சந்திக்க உள்ளோம். திமுக ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரை 226 தொழில் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.2.95 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இவை செயல்பாட்டுக்கு வரும்போது, 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் முதல்வருக்கு துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், துறை உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

**நினைவிடங்களில் மரியாதை:** வெளிநாடு பயணம் மேற்கொள்ளும் முன்பாக சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களுக்கு முதல்வர் ஸ்டாலின் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

EVA STALIN

# சிபிஎஸ்இ உள்ளிட்ட அனைத்து வகை பள்ளிகளிலும் தமிழ்ப் பாடம் கட்டாயம்

## தனியார் பள்ளிகள் இயக்ககம் உத்தரவு

**சென்னை, மே 23:** 2024-2025-ஆம் கல்வியாண்டில் சி.பி.எஸ்.இ. மற்றும் ஐ.சி.எஸ்.இ. உள்ளிட்ட அனைத்து வகை பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவர்கள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தை கட்டாயமாக எழுத வேண்டும் என தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தனியார் பள்ளிகள் இயக்ககம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தனியார் பள்ளிகள் இயக்குநர் நாகராஜ முருகன், அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றிக்கை விவரம்:

தமிழகத்தில் அனைத்து விதமான பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு வரை தமிழ் கட்டாயம் என்ற சட்டம் நடைமுறையில் உள்ளது. அதன்படி, 2015-2016-ஆம் கல்வியாண்டில் அனைத்து வகை பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பில் தமிழ் கட்டாயப் பாடமானது.

2016-2017-ஆம் கல்வியாண்டில் பிளஸ் 2 வகுப்புக்கும், அடுத்தடுத்த கல்வியாண்டுகளில் ஒவ்வொரு வகுப்பாகவும் படிப்படியாக அமலானது.

அதன்படி, 2022-2023-ஆம் கல்வியாண்டில் 8-ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாய பாடமாக நடைமுறைக்கு வந்தது. இந்த நிலையில், வரும் 2023-2024-ஆம் கல்வியாண்டில் 9-ஆம் வகுப்பு வரையும், 2024-2025-ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு வரையும் தமிழ்ப் பாடம் கட்டாயமாகிறது.

இது மாநில பாடத்திட்ட பள்ளிகளுக்கு மட்டுமின்றி, தமிழகத்தில் செயல்படும் சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ உள்பட அனைத்து விதமான பள்ளிகளுக்கும் பொருந்தும். இந்த மாணவர்கள் பொதுத் தேர்விலும் தமிழை ஒரு தேர்வாக கட்டாயம் எழுத வேண்டும். இதற்கான தேர்வு முறை மற்றும் பாடத் திட்டம் போன்றவை விரைவில் வடிவமைக்கப்படும்.

எனவே, அனைத்துவித தனியார் பள்ளிகளும், தமிழில் தகுதியான ஆசிரியர்களைப் பணியமர்த்தி, மாணவர்களுக்கு தமிழ்ப் பாடத்தை கட்டாயம் கற்றுத்தர வேண்டும். தமிழ் கட்டாய பாடமுறை குறித்த அறிவிப்பை, தனியார் பள்ளிகள் கடைப்பிடிப்பதை அந்தந்த மாவட்ட கல்வி அதிகாரிகள் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை உயர்நீதிமன்றத்தில் 4 புதிய நீதிபதிகள் பதவியேற்பு

**சென்னை, மே 23:** சென்னை உயர்நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நான்கு கூடுதல் நீதிபதிகள் செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டனர்.

மாவட்ட நீதிபதிகள் அந்தஸ்தில் இருந்த உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் பி.தனபால், கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி ஆர்.சக்திவேல், சென்னை தொழிலாளர் நீதிமன்ற முதன்மை நீதிபதி சி.குமரப்பன், கோவை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி கே.ராஜசேகர் ஆகிய நான்கு பேரை சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவு பிறப்பித்திருந்தார்.



சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய நீதிபதிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்த உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (பொ) டி.ராஜா (வலது ஓரம்). உடன், பதவியேற்றுக்கொண்ட (இடமிருந்து) கந்தசாமி ராஜசேகர், சின்னசாமி குமரப்பன், தனபால், ராமசாமி சக்திவேல்.

இந்த நிலையில், புதிய நீதிபதிகள் பதவியேற்பு நிகழ்வு, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூடுதல் கூட்ட அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், தலைமை நீதிபதி (பொ) டி. ராஜா, புதிய நீதிபதிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

**64-ஆக உயர்வு:** புதிய நீதிபதிகளுடன் சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்தது.

இன்னும் 11 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன.

தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் ஆர்.சண்முகசுந்தரம் வரவேற்றுப் பேசுகையில், 'புதிய நீதிபதிகளான சக்திவேல், தனபால் மற்றும் குமரப்பன் ஆகியோர் உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர்களாகவும், நீதிபதி ராஜசேகர் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலராகவும், உயர்நீதிமன்றத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததால், உயர்நீதிமன்றத்தின் மரபுகளை உறுதிப்படுத்துவார்கள்' என்றார் அவர்.

## என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன்

# மே29-இல் விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட்!

**சென்னை, மே 23:** போக்குவரத்து வழிகாட்டுதலுக்கான என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட், வரும் 29-ஆம் தேதி விண்ணில் பாய்கிறது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஏவுதளத்திலிருந்து அன்றைய தினம் காலை 10.42 மணிக்கு அந்த ராக்கெட் செலுத்தப்படவுள்ளது.

தரைவழி, கடல்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்காக 'இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பு' என்ற கட்டமைப்பை (ஐஆர்என்எஸ்எஸ்) உருவாக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது.

அதன்படி, ரூ.1,420 கோடி செலவில் ஐஆர்என்எஸ்எஸ் 1ஏ, 1பி, 1சி, 1டி, 1இ, 1எப், 1ஜி என 7 வழிகாட்டுதல் செயற்கைக்கோள்கள் வடிவமைக்கப்பட்டு கடந்த 2013 முதல் 2016-ஆம் ஆண்டு வரையான காலகட்டங்களில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

இதனிடையே, முதல் முதலில் செலுத்தப்பட்ட ஐஆர்என்எஸ்எஸ் 1-ஏ செயற்கைக்கோள் செயலிழந்தது. அதற்கு மாற்றாக 2017-இல் ஐஆர்என்எஸ்எஸ் 1-ஹெச் செயற்கைக்கோள் ஏவப்பட்டது. ஆனால், அதை சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த முடியாததால் அந்தத் திட்டம் தோல்வியில் முடிந்தது.



என்விஎஸ்-01 செயற்கைக்கோள்.

அதன்பின், ஐஆர்என்எஸ்எஸ் 1ஏ-வுக்கு மாற்றாக 1-ஐ செயற்கைக்கோள் 2018-ஆம் ஆண்டு வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஐஆர்என்எஸ்எஸ் 1-ஜி செயற்கைக்கோளுக்கு மாற்றாக என்விஎஸ்-01 செயற்கைக் கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி எஃப்-12 ராக்கெட் மூலம் வரும் 29-ஆம் தேதி விண்ணில் ஏவப்படவுள்ளது. இதற்கான இறுதிகட்ட பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

என்விஎஸ் செயற்கைக்கோள் 2,232 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுள்காலம் 10 ஆண்டுகள்.

இதில் முதல்முறையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட அணுக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மற்ற செயற்கைக்கோள்களுடன் சேர்ந்து தரை, கடல், வான்வெளி போக்குவரத்தை கண்காணிக்கும். பேரிடர் காலங்களில் துல்லிய தகவல்களை தெரிவிக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**சந்திரயான்-3:** இதனிடையே, நிலவை ஆய்வு செய்வதற்கான சந்திரயான் -3 விண்கலத்தை ஜூலை மாதத்தில் விண்ணுக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது. இதற்கான இறுதிக்கட்டப் பணிகள் விரைவில் நிறைவடைந்து, ராக்கெட் ஏவுதலுக்கான தேதிகள் அறிவிக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# வளரிளம் பருவத்தினருக்காக 25,000 மருத்துவ முகாம்கள்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, மே 23: தமிழகத்தில் வளரிளம் பருவத்தினரின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக 25 ஆயிரம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

ரத்த சோகை பாதிப்புகளைக் கண்டறிவதற்கான மருத்துவ முகாமை சென்னை, சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்தார். மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் சுகன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பத்மஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியது: வளரிளம் பருவத்தினர் நலனை மேம்படுத்திடும் வகையில் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்துக்கு ஒரு முகாம் என்கிற வகையில் 25 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தற்போது சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 500 பேருக்கு இந்த சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 10 முதல் 19 வயதுக்குள்பட்ட வளரிளம் மாணவ, மாணவிகளுக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் ரத்த சோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்பு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள 1.2 கோடி பேர் பயனடைவர்.

தமிழகத்தில் 52.9 சதவீத வளரிளம் பெண்களுக்கும், 24.6 சதவீத வளரிளம் ஆண்களுக்கும் ரத்த சோகை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

ரத்தசோகை பாதிப்பு இல்லாத நிலையை தமிழகம் எட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மற்றொருபுறம், வருமுன் காப்போம் என்ற திட்டத்தின் கீழ் முதலாம் ஆண்டில் 1,260 முகாம்களும், இரண்டாம் ஆண்டில் 1,532 முகாம்களும் நடத்தப்பட்டன. அரசின் முன்னெடுப்பில் நடைபெறும் இந்த மருத்துவ முகாம்கள் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் பயனடைந்து வருகின்றனர் என்றார் அவர்.

EVA

# ஆஸ்திரேலியாவில் 'குட்டி இந்தியா' நட்புறவு நினைவுச் சின்னம்

**சிட்னி, மே 23:** ஆஸ்திரேலியாவில் இந்தியர்கள் அதிகமாக வசிக்கும் ஹாரிஸ் பூங்கா பகுதியில் 'குட்டி இந்தியா' என்ற நட்புறவு நினைவுச் சின்னத்தை அமைப்பதற்குப் பிரதமர் மோடியும் ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசியும் செவ்வாய்க்கிழமை அடிக்கல் நாட்டினர்.

ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் இந்திய சமூகத்தினர் அந்நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றனர். அதைப் போற்றும் வகையிலும் இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவைச் சிறப்பிக்கும் வகையிலும் சிட்னி நகரில் 'குட்டி இந்தியா' என்ற பகுதி அமைக்கப்படவுள்ளது. அப்பகுதியில் அமைக்கப்படவுள்ள நினைவுச் சின்னத்துக்கு பிரதமர் மோடியும் ஆஸ்திரேலிய பிரதமர் ஆல்பனேசியும் அடிக்கல் நாட்டினர்.

இது தொடர்பாக சிட்னி நகரில் அமைந்துள்ள பாரமட்டா நிர்வாகம் வெளியிட்ட வலைதளப் பதிவில், 'ஹாரிஸ் பூங்கா பகுதியில் இந்தியர்கள் அதிக எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர். இந்திய சமூகத்தினர் இப்பகுதியில் பல்வேறு வகையான கடைகளை வைத்துள்ளனர். இந்திய உணவு வகைகளும் இங்கு அதிகளவில் கிடைக்கின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆஸ்திரேலிய பிரதமர் ஆல்பனேசிக்குப் பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். சிட்னி நகர உள்ளாட்சி நிர்வாகிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

ஹாரிஸ் பூங்கா பகுதியில் வசிக்கும் 45 சதவீதம் பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'தி ஆஸ்திரேலியன்' இதழுக்கு பிரதமர் மோடி அளித்த பேட்டியில், 'இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான நல்லுறவை அடுத்தகட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். பாதுகாப்புத் துறையில் இருதரப்பு நல்லுறவு மேம்படுத்தப்படும். இந்திய-பசிபிக் பிராந்தியம் வெளிப்படைத்தன்மையுடனும் சுதந்திரமாகவும் திகழ்வதை இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் உறுதி செய்யும். பருவநிலை மாற்றம், பயங்கரவாதத் தடுப்பு, கடல்கொள்ளை தடுப்பு உள்ளிட்டவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைத்து செயல்படும்.

இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இரு நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர நம்பிக்கையானது நல்லுறவுக்கு அடித்தளமாகத் திகழ்கிறது' என்றார்.

## பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்



ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைக்கப்படவுள்ள 'குட்டி இந்தியா' நினைவுச் சின்னத்துக்கு செவ்வாய்க்கிழமை அடிக்கல் நாட்டிய பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி.

## முதலீட்டாளர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

**சிட்னி, மே 23:** ஆஸ்திரேலிய தொழில் நிறுவனங்களின் தலைவர்களை செவ்வாய்க்கிழமை சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுத்தார்.

ஜப்பான், பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து, பிரதமர் மோடி ஆஸ்திரேலியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்நாட்டுத் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோரை சிட்னி நகரில் அவர் செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

ஹான்காக் நிர்வாகத் தலைவர் கினா ரின் ஹார்ட், ஃபோர்டெஸ்கியூ ஃபியூச்சர் நிர்வாகத் தலைவர் ஆண்ட்ரூ ஃபாரஸ்ட், ஆஸ்திரேலியா சூப்பர் தலைமை நிர்வாக அதிகாரி பால் ஸ்க்ரோடர் ஆகியோரை அவர் தனித்தனியே சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, சுரங்கம், கனிமங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. முதலீடுகளை மேற்கொள்வதில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. பசுமை ஹைட்ரஜன் துறையில் ஆஸ்திரேலிய நிறுவனங்கள் சில முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன. அதை இந்தியா வரவேற்கிறது.

பசுமை ஹைட்ரஜன் துறையில் இந்தியா பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு துறைகளில் ஆஸ்திரேலிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமர் மோடியுடனான சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்ததாகத் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவுடனான முதலீட்டு நல்லுறவை மேம்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் 13-ஆவது மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளியாக ஆஸ்திரேலியா திகழ்கிறது. ஆஸ்திரேலியாவில் இருந்து தங்கம், நிலக்கரி, தாமிர தாதுக்கள் உள்ளிட்டவற்றை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்துவருகிறது. கடந்த 2000-ஆம் முதல் 2022-ஆம் ஆண்டு வரை 107 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீட்டை ஆஸ்திரேலிய நிறுவனங்கள் இந்தியாவில் மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இருநாடுகளும் ஏற்கெனவே இடைக்கால தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

அதன்மூலமாக, இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக நல்லுறவு மேலும் வலுப்படும் என நம்பப்படுகிறது.

**முக்கியத் தலைவர்களுடன் சந்திப்பு:** கலை, இசை உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கி வரும் ஆஸ்திரேலியர்களை பிரதமர் மோடி சிட்னி நகரில் சந்தித்துப் பேசினார். அப்போது, அவர்களது சாதனைகளுக்காக வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி, இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# விம்பிள்டன் நகரில் சகோதரி நிவேதிதா முழு உருவச்சிலை ஜூலை–1 இல் திறப்பு

கொல்கத்தா, மே 23: லண்டன், விம்பிள்டன் நகரில் சுவாமி விவேகானந்தரின் நெருங்கிய சீடரான சகோதரி நிவேதிதாவின் ஆளுயர சிலை வரும் ஜூலை 1–ஆம் தேதி திறக்கப்பட உள்ளது.


மேற்கு வங்கம் சர்காச்சியில் உருவாக்கப்பட்ட சகோதரி நிவேதிதாவின் ஆளுயர வெண்கலச் சிலை.

மேற்கு வங்கம், சர்காச்சி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தின் செயலர் சுவாமி விஸ்வமயானந்தஜி வடிவமைத்து, பிரபல சிற்பி நிரஞ்சன் செதுக்கிய சகோதரி நிவேதிதாவின் 6.2 அடி உயர சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டுள்ளது.

அயர்லாந்தில் கடந்த 1867–ஆம் ஆண்டு பிறந்து, இங்கிலாந்தில் வளர்ந்த சகோதரி நிவேதிதாவின் இயற்பெயர் மார்கரெட் எலிசபெத் நோபிள் ஆகும். ஏழை மக்களுக்காக விம்பிள்டன் நகரில் பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்த சகோதரி நிவேதிதா, சுவாமி விவேகானந்தரைத் தனது ஆன்மிக குருவாக ஏற்றுக் கொண்டு இந்தியாவுக்கு வந்தடைந்தார். பெண்கள் முன்னேற்றம், சுதந்திரப் போராட்டம் என பல்வேறு சமூக பணிகளில் முக்கிய பங்காற்றி இந்தியாவிலேயே தனது முழு வாழ்நாளைக் கழித்தார்.

இந்நிலையில், இந்தியாவில் பெண்கள் முன்னேற்றத்துக்காக சகோதரி நிவேதிதா ஆற்றிய பங்களிப்பை நினைவுகூர்ந்து விம்பிள்டன் நகரில் அமைந்துள்ள ரிசர்ட் லாட்ஜ் உயர்நிலைப் பள்ளி முன்வளாகத்தில் சகோதரி நிவேதிதாவின் முழு உருவச்சிலை அமைக்கப்பட உள்ளது.

பிரிட்டனில் அமைந்துள்ள சகோதரி நிவேதிதா அறக்கட்டளை, பிதான் நகர் ராமகிருஷ்ண விவேகானந்த கேந்திரா, கொல்கத்தாவின் சத்யஜித் சக்ரவர்த்தி பொறியியல் பல்கலைகழகம் ஆகியோரின் கூட்டு முயற்சியாலும், நிதி பங்களிப்பாலும் சகோதரி நிவேதிதா சிலை விம்பிள்டன் நகரில் நிறுவப்பட உள்ளது.

# கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வில் வாய்க்கால் அமைப்பு

**அரியலூர், மே 23:** அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் அருகேயுள்ள மாளிகைபுரம் கிராமத்தில் நடைபெற்று வரும் 3-ஆம் கட்ட அகழாய்வுப் பணியில், செங்கற்கல்லால் ஆன வாய்க்கால் போன்ற அமைப்பு கண்டறியப்பட்டுள்ளது.

கங்கை கொண்ட சோழபுரம் அடுத்த மாளிகைமேடு கிராமத்தில் கடந்த மாதம் 6-ஆம் தேதி முதல் 3-ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் அண்மையில் நடைபெற்ற பணியின்போது, செங்கற்கல்லால் ஆன வாய்க்கால் போன்ற அமைப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால் போன்ற அமைப்பு கிழக்கு மேற்காக 315 செ.மீ. நீளம், 45 செ.மீ. அகலம் கொண்டதாக உள்ளது. மேலும், வாய்க்கால் நீளம் எவ்வளவு உள்ளது எனக் கண்டறியும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.



கங்கைகொண்டசோழபுரம் மாளிகைமேட்டில் நடைபெறும் அகழாய்வுப் பணியில் கண்டறியப்பட்டுள்ள வாய்க்கால் போன்ற அமைப்பு.

EVA STALIN IAS ACADEMY